NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் [illegible] ஆவணி 2 ஜுலைகஸ் 11 இதழ் 189

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18-8-1986

## இனப்பிரச்னை ஆய்வு: சுவிஸ் தொலைக்காட்சிகுழு இலங்கை வருகிறது

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலுள்ள தமிழ மக்களினது பிரச்சனைகளை ஆராயவென சுவிஸ் நாட்டின் தொலைக்காட்சிக் குழு வொன்று இலங்கை வரவுள்ளது. இவ்வார இறுதிக்குள் இக்குழு இலங்கை வருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு, இலங்கையில் இனப் பிரச்னையுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அரசஉயர்அதிகாரிகள், இங்குள்ள வெளிநாட்டுத் தூதராலய அதிகாரிகள், எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் ஆகியோரை சந்தித்து இனப் பிரச்னை சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்துமென எதிர்பார்க்கப்படுகிறது அத்துடன் இனப் பிரச்னையின் பக்கவிளைவுகளிலொன்ருகிய தமிழ் அகதிகளின் பிரச்னை குறித்தும் இக்குழு ஆராயவுள்ளது. அதற்காக புனர்வாழ்வுத்துறை அதிகாரிகளையும் அகதிகளின் நலன் சேவையில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அதி

[4ம் பக்கம் பார்க்க]

● உடன்பாடுகள் முழுமைபெறுவதாயின்

# தமிழ் போராளி குழுக்களுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும்

## அமிர் கருத்து

(கொழும்பு)

"இலங்கை அரசுடன் இடம்பெற்றுவரும் பேச்சுக்களில் குறிப்பிடத் தக்களவு எதுவித முன்னேற்றமுமில்லை. போராளிக் குழுக்களுடனும் இலங்கை அரசு நேரடியாக பேச்சு நடத்துவதன் மூலமே தீர்வொன்றைக் காணமுடியுமென்று நாம் கருத்துகிறேம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தமது பேச்சுக்கள் குறித்து ''ஈழநாடு'' வுககு நேற்று கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: பேச்சுக்கள் தொடருகின்றன. ஆனல் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமெதுவுமில்லை. பலவிடயங்கள் குறித்து ஆராய வேண்டியுள்ளது மேலும் பல வற்றை இன்னும் ஆராயத் தொடங்கவில்லை

ஒவ்வொரு விடயத்திலும் உறுதியான முடிவுகள் எடுபப திலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி ஆர்வங்கொண்டுள்ளது.

இழுபறியோ, உடன்பாடோ அற்றநிலையிலேயே தற்போது பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. இவற்றின் முடிவுகள் எப்படி அமையும் என்பசனை தற்போதைய நிலையில் திட்வட்டமாகக் கூறமுடியாது

ஏனெனில் இது மிகவும் ஒரு சிக்கலான சந்திப்ப. முன்கூட்டியே அபிப்பிராயங்களை வெளியிடுவது பிரச்னைகளைத் தோற்றுவிக்கும்.

(4ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் கிளர்ச்சி குழுக்கள் தீவிரம்!

கொழும்பு, ஞாயிறு

தென்பகுதியில் அரசாங்கத்துக்கெதிராகப் பல கிளர்ச்சிக் குழுக்கள் தீவிரமடைந்து வருகின்றன. இத்தகவலை பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

இவற்றுள் ரோகனவிஜேவீர தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுன இயக்கமே முக்கியம் பெறுகின்றதெனவும், இதில் பத்தாயிரம் அங்கத்தவர்கள் தற்போது உள்ளனரெனவும் இவர்களில் 75 முதல் 100 பேர்வரை தீவிர முழுநேரத் தொண்டர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தெற்கில் உருவாகியுள்ள வேறுசிறு கிளர்ச்சி குழுக்கள் வடபகுதி தீவிரவாதத் தமிழ்க் குழுக்களுடன்

[4ம் பக்கம் பார்க்க]

## புதிய அரசியற் கட்சி?

கொழும்பு, ஞாயிறு

தமிழ்த் தீவிரவாதக் குழுக்களிலுள்ள சில அங்கத்தவர்களால் 'தமிழீழ மக்கள்கட்சி' என்ற பெயருடன் அரசியற் கட்சியொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டின் அரசியலில் பிரவேசிக்கும் எண்ணமுடைய அங்கத்தவர்களுக்காகவே இக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதெனவும் தெரிய வருகிறது. [ஊ]

## யாழ். வந்த லொறியில்—— ரூ. 75ஆயிரம்பெறுமதியான உணவு பொருட்கள் கொள்ளை!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் லொறியில் இருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் காடையர் கோஷ்டி ஒன்றினல் பயங்கர ஆயுத முனையில் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து யாழ் - மானிப்பாய் வீதியைச்சேர்ந்த திருப்பதி ஸ்ரோர்சுக்குச் சொந்தமான லொறி ஒன்று 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது

சுமார் 7 மணியளவில் கொச்சிக்கடைப் பக்கம் அந்தலொறி வந்துகொண்டிருந்தபோது, அதன் முன்னல் கார் ஒன்று குறுக்கிட்டது தொடர்ந்து அதிலிருந்து இறங்கிய 4 பேர் துப்பாக்கி, கிறிஸ் போன்ற ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி லொறியில்ஏறிக்கொணடனர். லொறிச் சாரதி, கிளீனர் ஆகியோரது கண்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

## அகதிகள் விவகாரம்: மே. ஜெர்மன் பணியகத்துக்கு தீ வைப்பு!

பொன், ஞாயிறு

மேற்கு ஜெர்மனியில், அகதிகளை கடத்துவோர் மற்றும் சட்டவிரோத வேலைவாய்ப்பு முகவர்நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளை விசாரித்துவரும் விசேட புலனாய்வுப் பணியகத்தின் அலுவலகத்துக்கு நேற்றுக்காலை தீவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஹம்பேர்க் நகரிலுள்ள இவ்வலுவலகம் தீயினுல் கணிசமானளவு சேதமடைந்தாலும், பணியகத்தின் முக்கிய ஸ்தாவேஜுக்கள் வேருெரு அலுவலகத்திலேயே வைக்கப்பட்டிருந்ததால் அவை சேதமடையவில்லை எனத்தெரியவருகின்றது.

ஹம்பேர்க் நகரிலுள்ள கிளர்ச்சிப்படையொன்றின் ஆதரவாளார இந்நாசவேலைக்குக் காரணமாயிருக்கலாம் என ஹம்போக் நகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஊ)

## வல்வையில் இராணுவம் புலிகள் நேரடி மோதல்!

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறையில் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் இராணுவத்தனர் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டது. அவர்கள் இந்த இழப்புகளுடன் பின்வாங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேரடி யுத்தம் குறித்துத் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில், பிராந்திய கட்டுப்பாட்டுக்கான நேரடி யுத்தம் இதுவென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:-

''நேற்றுப் பிற்பகல் 2-05 மணியளவில் வல்வெட்டித் துறை இராணுவ முகாமிலிருந்து சுமார் 50 இராணுவத்தினர் வெளியேறிய சமயம் இடம்பெற்ற நேரடி மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர்

(4-ம் பக்கம் பார்க்க)

## கேள்விக்கணைகளால் தினேஷ் கூட்டம் தடுமாற்றம்!

அம்பலாங்கொடை, ஞாயிறு

அம்பலாங்கொடை நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் மகாஜன எக்ஸத் பெரமுனத் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன பேசியபோது கூட்டத்திலிருந்தவர்கள் பல கேள்விகளை எழுப்பினர்கள்.

இப்பகுதியைச் சேர்ந்த இடதுசாரி அமைப்புகளைச் சேர்ந்தவர்களே கேள்விகளை எழுதித் திரு திணேஷ் குணவாத்தனவிடம் கொடுத்தார்கள்.

ஒருவர் கேள்வியொன்றைக் கேட்டபோது, ''எனது பேச்சைக் கேட்கமுடியாதவர்கள் கூட்டத்தைவிட்டுப் போகலாம்'' என ஒரு கட்டத்தில் திரு. குணவர்த்தன எரிச்சலுடன் கூறினர்.

மாகாணசபைத் திட்டத்தை அரசாங்கம் அமுல்நடத்துவதற்கு முன்னர் மக்கள் கருத்துக் கணிப்பொன்றினை நடத்த வேண்டுமென திரு குணவர்த்தன தமது பேச்சின்போது

[4-ம் பக்கம் பார்க்க]

## மன்னிப்புக் கோரினர்

ஒட்டாவா, ஞாயிறு

அண்மையில் நியுபவுண்லாந்துக்கு அருகே மீட்கப்பட்ட 152 இலங்கைத் தமிழ் அகதிகளும் தாம் ஜேர்மனியிலிருந்தே புறப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்படுகிறது.

தாம் இந்தியாவிலிருந்து புறப்பட்டதாக கனடிய அதிகாரிகளிடம் பொய் கூறியதாகவும் தெரிவித்ததுடன் அதையிட்டு மன்னிப்பும் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் தாங்கள் மேற்கு ஜேர்மனியில் கப்பலில் ஏறும்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், கசற் றேடியோ, Baby Cot, Show Case, கண்ணாடி மேசைகள். Formica சாப்பாட்டு மேசை கதிரைகள், கிளாஸ், பித்தளை, சில்வர் பைரக்ஸ், Pyrex வகைகள், T.V. Stand Form Rubber மெத்தைகள் சிங்கர் Zig Zag தையல் மெசின், ஹோல் செற், மற்றும் பல உடன் விற்பனைக்கு. M. தியாகராஜன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்)
(C 4067)

வீட்டு தளபாடங்கள், தட்டச்சுயந்திரம், சைக்கிள், 'ஹோல்' செற்றி, சோகேசுகள், சில்வர் பாத்திரம், குளிர் சாதனப்பெட்டிகள், Fan, மேசைகள், கட்டில், தையல் மெஷின் மலிவு விற்பனைக்குண்டு. புவிராஜசிங்கி 331 மெயின் வீதி, யாழ்ப்பாணம்.
C 4115

### தேவை

பெருந்தொகையான நெல்லிக்கனி தேவை. விலை விபரங்களுடன் மாதிரியுடனும் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்: பணிப்பாளர்: அருள் ஆச்சிரமம், இல. 5, கோவில் வீதி (Temple Road), யாழ்நகர். தொலைபேசி: 24081 (A 1144)

இறைச்சிக்கு கோழிதேவை கிலோ 35 ரூபாவுக்கு மேற்பட்ட விலைகளில் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T. phone: 23131. (C 4106)

தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) புதிய, பழைய, எந்தநிலையிலும் வாங்குவோம். தொடர்பு: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி (3-ம் ஒழுங்கை) யாழ்ப்பாணம். C 4121

### வகுப்புகள்

உருத்திரவீணை - வாய்ப்பாட்டு ஆரம்பத்தில் இருந்து பழக விரும்பும் மாணவ/மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும். திருமதி துஷ்யந்தி நரேந்திரன் "ஹரிவாசம்", தாவடி றோட்' மானிப்பாய். C 4083

Spoken English புதிய நாளாந்த / வார இறுதி வகுப்புகள். ஆரம்பம்: 18-8-86 நேரம் மாலை 4 - 5. சனி / ஞாயிறு16-8-86. நேரம் மாலை 3 - 5. ஆசிரியர்: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர்.
[C-4011]

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம். புதிய தொழில் நுட்பவகுப்புகள் Electronic Engineering: Radio and T.V. (Antenna Deck), வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall [ஆனைப்பந்தி சந்திக்கருகாமையில்] 328 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4124

### சேவை

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும். காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள்: தர்சினீஸ், அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

தட்டச்சு இயந்திரங்கள் [Type writers] சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். அத்துடன் விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprise, 39/17, மின்சாரநிலைய வீதி. [3ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். [C-4088]

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ
(A 1041)

## நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திரு. S.K இரத்தினசாமி
அன்னையின் மடியில்:
31- 12- 1922
அத்தனின் அடியில்:
22- 7- 1986

எமது அன்பின் பிணைப்பும் ஈசன் கழலடி மறவாச் சிந்தையனுமாகிய இரத்தினசாமி 22- 7- 86 அன்று அவன் திருவடி தேடி சென்றுவிட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் கலந்து எமக்கு ஆறுதல் அளித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் இன்னும் சகல வழிகளிலும் உதவி ஒத்தாசை அளித்தும் உள்ளோர் அனைவருக்கும் எமது அன்போடு கூடிய நன்றியைத் தெரிவிப்பதோடு 21-8-86 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் சாந்திக்கான வழிபாட்டிலும் பின் சபிண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்:
பிரிவுத்துயரில் துன்புறும்
மனைவி: கனகமணி,
பிள்ளைகள்: கல்யாணி,
வதனி, மகேந்திரா,
மாதங்கி, மற்றும்
குடும்பத்தினர்.
"கனகவாசா",
புலோலி தெற்கு,
புலோலி. (C 4090)

## 31-ம் நாள் நினைவு



நீ. மனுவற்பிள்ளை
நவரெட்டினம்
(Tug Master)
(ஓய்வுபெற்றவர்)
உதயம்: 08-12-1913
உறக்கம்: 20-07 1986

''உயிர்ப்பில் சந்திக்க இருப்பவர்கள்'
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

இவரின் நினைவாக ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் காலை 6 மணிக்கு (19-08-86)ல் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
''இந்திரபவனம்'',
புனிதயேம்ஸ் வீதி,
ஊர்காவற்றுறை.
(C 4077)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



ச. சம்பந்தசரணாலயம்
மண்ணுலகு:
17-02-1920
விண்ணுலகு:
16-08-1984

விழியோரம் வழிந்தோடும் கண்ணீர்
இன்னும் வற்றவில்லை- ஐயா
இங்கு நீரொருவர் இல்லாமல்
வேறுதுணையின்றி நிர்கதியாய்
நிற்கின்றோமையா!
சிந்தையெல்லாம் நும் நினைவை
நிலை நிறுத்தப் பல நற் செயல்கள்
புரிந்துவிட்டு எங்கள் ஐயா எங்கே
மறைந்தனையோ!
நொந்துயிர் வாடும் எமக்கு
'வழிகாட்டுமையா!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
"சரணாலயம்",
வெள்ளியம்பதி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (C 4123)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

றெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED
- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- வெள்ளைச் சிமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் இடைக்குமிடம்

Rs. 6/75-க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12
தொலைபேசி: 34411 — 31511
A 1053

## REGISTRATION OF CONTRACTORS

FOR THE MAINTENANCE OF ELECTRICAL/ ELECTRONIC APPLIANCES AND AIR-CONDITIONERS AND COOLERS

Applications are invited from recognised Firms and qualified individuals for Registration as Contractors for the maintenance of Electrical/Electronic appliances, Air-conditioners and Coolers etc. at this Teaching Hospital.

Applications should be accompanied with details of staff with their qualifications and experience and also with the details of work done in this field up to now.

Applications shoud be sent by Registered post addressed to the Director, Teaching Hospital, Jaffna to reach him on or before 31st August, 1986.

C. S. NACHINARKINIAN,
Director.

General Hospital (Teaching),
Jaffna.
14-08-1986. A 1150

பிரயாண ஒழுங்குகள்
டென்மார்க்
(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)
கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்
(வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள் அத்துடன் பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

யூனிவேர்சல்
ஏஜென்சி
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)

### மணிவாக்கு

வரலாற்றாசிரியர்கள் கடந்த காலங்களை எமக்கு எடுத்துக்கூறுகிறார்கள், பொருளியலாளர்கள் எதிர்காலத்தை எடுத்தியம்புகின்றார்கள். நிகழ்காலம்தான் ஒரே குழப்பமாகவிருக்கின்றது.

—லியோன் சம்பெட்டா

# 'தமிழ்மொழியில் வரும் கடிதங்களுக்கு அம்மொழியில் பதில் அனுப்பவேண்டும்'

## யாழ். சுகாதாரசேவை அதிபர் பணிப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

யாழ் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் நிறுவனங்கள் யாவும் தமிழ் மொழியில் வரும் கடிதங்களுக்கு அம் மொழியிலேயே கடிதத் தொடர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று யாழ் பிரதேசசுகாதாரசேவை பணிப்பாளர் விடுத்துள்ள சுற்றுநிருபமொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழியில் போகும் கடிதங்கள் பற்றிய பதிவேடு ஒன்று ஒவ்வொரு நிறுவனத்திலும் பேணப்பட்டு தமிழில் போகும் கடிதங்கள் யாவும் அதில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் இந்த ஏற்பாட்டை செயற்படுத்த உடன் நடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இந்த சுற்றுநிருபத்தில் யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் தமிழ்மொழிக்கென உள்ள ஏற்பாடுகளை செயற்படுத்தும் பொருட்டு அரசியல் யாப்பில் 22ம் உறுப்புரையின் பிரகாரம் தமிழ் மொழியில் கடிதத் தொடர்பைப் பெறுவதற்கு உரித்துடைய எல்லா ஆட்களும் அம் மொழியிலேயே கடிதத் தொடர்புகளை வைத்துக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட செயலாளராலும் அரசாங்க அதிபராலும் விடுவிக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [எ]

# நமது நோக்கு

## அகதிகள் நிலையும் உலக அபிப்பிராயமும்

கனேடிய கடலில் தத்தளித்துக் கொண்டிருந்து காப்பாற்றப்பட்ட 150 இலங்கையர்கள் பற்றிய செய்தி இன்னமும் உலகப் பத்திரிகைத் தலைப்புக்களிலிருந்து விடுபடவில்லை.

அவர்கள் எங்கிருந்து புறப்பட்டார்கள், எந்தக் கப்பல் அவர்களைக் கடலில் இறக்கிவிட்டுச் சென்றது என்பது பற்றியவிபரங்களை அறிய கனேடிய அதிகாரிகள் பெரும்பாடு படுவதாகத் தெரிகின்றது.

எங்காவது நிம்மதியாக வாழ்க்கை நடத்த இடம் கிடைத்தால் போதுமென்று புறப்பட்ட இவர்கள் அதிகாரிகளுக்குக்கொடுத்துள்ள தகவல்களுக்கும், இவர்களின் அவலநிலையைத் தம் சொந்த நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்காக அழைத்துச் சென்றவர்கள் கொடுத்துள்ள தகவல்களுக்குமிடையில் முரண்பாடுகள் இருப்பதுஇயற்கை எனவே இவர்களின் உண்மையான நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள இன்னும் சில நாட்கள் போகலாம். எதுவானாலும், தஞ்சமென்று வந்தவர்களின் நலன்களுக்கு கனேடிய அதிகாரிகளின் நடவடிக்கைகள் பாதகமாக அமையாதென்று நாம் நம்புகின்றோம்.

ஏற்கனவே இவர்களுக்கு ஒருவருடகாலம் கனடாவில் வசிப்பதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் இனக்கலவரங்கள் உச்சக்கட்டத்தை எட்டியகாலம் தொடக்கம் அடைக்கலம் கோரிவந்த இலங்கைத்தமிழர் எவரையும் கனேடிய அதிகாரிகள் நாடு கடத்தியதாக இல்லை.

எனவே புதிதாக அந் நாட்டுக்குச் சென்றுள்ள இந்த அகதிகளுக்குப் அதே அந்தஸ்தும் வசதிகளும் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

உலகச்செய்தி ஏடுகளிலும், தொலைக்காட்சிகளிலும் குறிப்பாக மேற்குநாடுகளில் இந்த 150பேர் பற்றிய செய்திகளும் விமர்சனங்களும் கடந்த சில நாட்களாக முக்கிய இடத்தை வகித்துவருவதுகொழும்பில் உள்ளவர்களுககு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

உலக யுத்தங்கள் இரண்டிலும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ள மேற்குலக மக்கள் அகதிகள் பற்றிய அவலங்களை நன்கு அறிவார்கள். ''இந்தியாவின் ஒருகரையில் உள்ள இலங்கையென்ற தீவின் ஆட்சியாளர்களும் அங்குள்ள பெரும்பான்மை இனத்தவர்களும் இழைக்கின்ற கொடுமைகள் தாங்கமுடியாமலே இவர்கள் இவ்வளவு தூரம் உயிரை வெறுத்துப் புறப்பட்டு வந்து துன்பப்படுகின்றார்கள்'' என அவர்களை இச்சம்பவம் எண்ணத் தூண்டும், அதனால் இலங்கைக்கு தங்கள் நாடுகள் நிதியுதவி, பொருளுதவி ஆயுத உதவி என அள்ளி வழங்குவதை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எனவே இப்பொழுதே இந்த அகதிகளின் நிலையை மறுத்து உலகநாடுகளில் பெரும்எடுப்பில் பிரச்சாரம் ஒன்றை நடாத்துவசற்கு இலங்கை அரசு முயற்சியில் ஈடுபடும் என்று சொல்லத் தேவையில்லை. கொழும்புப் பத்திரிகைகளும் அதையே வலியுறுத்தத் தொடங்கி உள்ளன.

அகதிகள் பிரச்னை ஏன் ஏற்பட்டது? அதைத் தீர்த்து வையுங்கள் -என்று சொல்வதற்கு எவரும் முன் வருவதைக் காணோம்.

இப்பொழுதும் கூட வேலை பெற்று வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகக் கொழும்புக்குப் புறப்படும் இளைஞர்கள் எத்தனை சோதனைகளைத் தாண்ட வேண்டியிருக்கின்றது?

முகாம்களில் தலையாட்டிகளை வைத்துக் கொண்டு ஆட்களைப் பிடிக்கிறார்கள். இவர்கள் தற்செயலாகத் தலையாட்டி விட்டாலும் போதும் அப்பாவி ஒருவரின் வாழ்வு அதோகதியாகிவிடும்.

நிலைமைகள் இவ்வாறு இருக்க வெளியில் பிரசாரங்கள் எங்ஙனம் எடுபடப் போகின்றது?

என்னதான் வெளி உலகில் வாழ்க்கை சொகுசாக அமைந்தாலும் சொந்தத் தய் நாட்டை விட்டுப் பெரும் எடுப்பில் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் புறப்பட்டுச் செல்கின்றார்கள் என்றால், அதற்கு அடிப்படையில் நியாயமான காரணம் இருக்கவே செய்யும் என வெளிநாட்டவர்களுக்கு விளங்காமல் இருக்காது

எனவே அந்தமக்கள் அனைவரும்சுதந்திரமாகத்திரும்பி வருவதற்கான சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்பதையே இப்போது ஆலோசிக்க வேண்டும் அதுவே உலக அபிப்பிராயத்தை மாற்றுவதற்கும் சரியான வழி.

## இன்று ஆழியவளை பஸ் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் - ஆழியவளை பஸ்சேவை இன்றுமுதல் மீண்டும் நடைபெறும்.

மருதங்கேணியிலிருந்துகாலை 6 மணிக்கும், காலை 10-30 மணிக்கும், யாழ்ப்பாணத்திற்கு இரு சேவைகளும், யாழ்ப்பாணத்திலிருந்து காலை 8-30 மணிக்கும், மாலை 4 மணிக்கு மருதங்கேணிக்கும் இரு சேவைகளும் நடைபெறும். பஸ் மருதங்கேணியில் தங்கி மறுநாள் காலை புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

### சண்டிலிப்பாய்-மாகியப்பிட்டி

# அங்கணாமை கடவை மீனாட்சி அம்மன்

யாழ்ப்பாணத்தில் பாய்கின்ற வழுக்கையாற்றின் வலப் பக்கத்தில்; சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, அளவெட்டி, கந்தரோடை ஆகிய கிராமங்களின் எல்லையில் இக் கிராமங்களுக்கு வழுக்கையாற்றில் கடவையாகத் திகழ்ந்த அங்கணாமை கடவையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் மீனாட்சி அம்மன் கோயில் பழம் பெருமை வாய்ந்த தலமாகும். தனிச் சிறப்பு மிக்க புராதன ஆலயமாக இது திகழ்கின்றது.

கடந்த 9ம் திகதி இவ்வாலயத்தில் கொடியேற்றத்துடன் மகோற்சவங்கள் ஆரம்பமாகி நாளை 19ம் திகதி ஆவணிப் பூரணையில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். அண்மையில்ஏற்படுத்தப்பட்ட ஆலய பரிபாலன சபை திருப்பணிகளைச் செய்து நிர்வகிப்பதுடன் மகோற்சவ ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்துள்ளது.

இவ்வாலயம் கண்டிப் பெரஹெரவாக இன்றும் நடைபெற்று வரும் கண்ணகி விழாவை ஆரம்பித்து இலங்கையின் பல பாகங்களிலும் கண்ணகிக்கு ஆலயம் அமைத்த கஜபாகுவினால் ஸ்தாபிக்கப்பட்டது சேரன், செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த போது இலங்கையை ஆண்ட இரண்டாம் கஜபாகு [கி பி 116-136] அவ்விழாவில் கலந்து கொண்டான். அவன், அக்காலத்தில் பெயர் பெற்று விளங்கிய சிருவடிநிலைத் துறையில் வந்திறங்கி கண்டிக்குத் திரும்பும் வழியில் அங்கணாமைக் கடவையில் கண்ணகிக்கு முதலாவது கோயிலை அமைத்துக் கண்ணகி வழிபாட்டையும் ஆரம்பித்து வைத்தான்.

இக்கோயில்ஒருபிரகாரத்திரு இரு கோயில்களாகக் கண்ணகை, மீனாட்சி அம்மைகளுக்கு அமைக்கப்பட்டது. கண்ணகி கோவில், இடது புறத்தில் பெரியதாக சிறந்த வேலைப்பாடுகளுடன் அமைந்திருக்க மீனாட்சி அம்மன் கோவில் வலதுபுறமாகச் சிறிதாக ஆனால் வருடம் தேறும் மகோற்சவம் நடைபெறும் கோவிலாக அமைந்துள்ளது

இக்கோயில் சிறப்புறப் பராமரிக்கப் படவும் மகோற்சவம் சிறப்புற நடைபெறவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்த மன்னன் தனது சிலையை கோவில் முன்றலில் நாட்டிச் சென்றான் என்றும் சொல்லப் படுகிறது கஜபாகு மன்னன் பத்தினி தெய்வத்திற்கு பாரிய அளவு கோயிலும் விழாவும் எடுக்க எண்ணி வந்த கருமம் அங்கனமே அமையப் பெற்றதினால் ''அங்கணாமை கடவை'' என்றும் இத்தலத்திற்கு பெயரிட்டுச் சென்றான் என்றும் கூறப்படுகிறது

இக்கோயிலைப் பற்றியகர்ண பரம்பரைக் கதை வேறு விதமானது.

ஏறக்குறைய 1850 வருட பழமைவாய்ந்த இக் கோயில் 5 கோயில்களைக் கொண்ட ஆலயத் தொகுதியை உடையது. கண்ணகி மீனாட்சி, மாரியம்மன், பிள்ளையார், நாகம்மாள் ஆகிய தெய்வங்களுக்கு கோவில்கள் அருகருகே இங்கேயுள்ளன. மன்னர் அமைத்ததற்கேற்ப பரிவார மூர்த்திகளுக்கு கோயில்கள் இல்லாமலும இப் பிரதான கோயில் காணப்படுகிறது. மேலும் கண்ணகி கோயில் பூசையை பிராமணர் அல்லாத ஒருவர் பரம்பரை பரம்பரையாகச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

நா. சோதிநாதன்.

## நோயாளர் அதிகரிப்பு

சுண்டுக்குளி ஞாயி.

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு இப்பொழுது தினமும் அதிகமான நோயாளர்கள் மருந்து பெறுவதற்காக வருகின்றார்கள்.

பலமைல்களுக்கப்பால் இருந்தும் இங்கு நோயாளர்கள் வருவதால் இவர்கள் தங்குவதற்கு போதியளவு தளபாடங்கள் இல்லாதது வசதிக்குறைவாகவே உள்ளது அத்துடன் இங்கு சில மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

### அராலித்துறையில்

# நயினை உற்சவத்திற்காக தாகசாந்தி அளிக்க ஏற்பாடு

வேலணை, ஞாயிறு

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோயிலின் வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு வெளியிடங்களிலிருந்து ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்களின் வசதிகருதி அராலித் துறையின் இருமருங்கிலும் குறிக்காட்டுவான் இறங்கு துறைமுகத்திலும் தாகசாந்தி நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகின்றன,

இவ்வித நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கென யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் வேலணை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு சி. சிவராசா புங்குடுதீவு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எஸ். வைரமுத்து ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ப. நோ. கூ. சங்கங்களும். தனியார் மற்றும் அமைப்புக்களும் செய்து கொடுக்கவும் முன்வந்திருக்கின்றன.

மேலும் துறைமுக மேடைகளில் யாத்திரீகர்கள் இளைப்பாறுவதற்காக கொட்டகைகளும் அமைப்பதற்கு பல பொது நிறுவனங்களும் முன் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இ]

## நல்லைக் கந்தன்

நீர்வளமும் நல்ல நிலவளமும் நின்றுதவச்
சீர்கலையும் செந்திருவும் செந்தமிழும் சேர்ந்
தொளிரும்
நெய்கமழும் நல்லூரில் நேயமொடு வீற்றிருக்கும்
ஐயனவன ஆதரிப்பான் அண்டு.

★ ★ ★ ★

நொந்தாரை நோகவிடான் நோய்நொடிகள்
நேரவிடான்
வந்தாரை நன்றாக வாழவைப்பான்- மந்தைநிரை
பின்சென்ற மாயவனின் பின்னமில்லா நன்மருகன்
மின் நல்லைக் கந்தனையே மேவு.

★ ★ ★ ★

நோய்நொடியை நீக்கி நொதுமலினைப் போக்கிடு
வான்
ஆய்தமிழுக் கென்றும் அருள்பொழிவான்- சேய்
முருகன்
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை மாற்றுவான்
நண்ணாரை வஞ்சிப்பான் நன்கு.

- கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க்கந்தன் 9-ம் திருவிழா]

## கேள்விக்கணை.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பேசவந்திருந்த திரு பிரின்ஸ் குணசேகரா பேசாமலே கூட்டத்தைவிட்டுச் சென்றார்.

இக்கூட்டத்தில் பேசிய வண. சுபித்த தேரோ, சிங்களவருக்கும் தமிழருக்குமிடையில் ஒற்றுமையீனம் ஏற்பட்டதற்கு அரசியல்வாதிகள்தான் காரணம் என்றார். அரசியல்வாதிகள் பொய் வாக்குறுதிகளை வழங்கியமையால் வடக்குக் கிழக்கில் தமிழ்-சிங்கள ஒற்றுமை கெட்டதுஎன்றார் அவர். [அ]

## வல்வையில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமது இழப்புகளுடன் பின் வாங்கினர்.

"இம்மோதலில் எமது வீரர் ஒருவர் காயப்பட்டார். இதனைத் தொடர்ந்து இராணுவ முகாமை நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதலும் எம்மவர்களால் மேற்கொள்ளப்பட்டது." [மா]

## இனப்பிரச்னை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரிகளையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

இத் தொலைக்காட்சிக் குழு, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் விஜயம் செய்வதில் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஊ]

## வவனியாவில் பாதுகாப்பு நடவடிக்கை

[வவனியா நிருபர்]

வவனியா நகரில் கடந்த இரு நாட்களாக ஆயுதப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

வவனியா புதிய பஸ் நிலையத்திலும் ஆயுதப்படையினர் காவல்புரிந்து வருகின்றனர். [மா]

## யாழ் வந்த---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கட்டப்பட்டனர். பின்னர் சிலா பத்துக்கு அண்மையில் லொறியுடன் சாரதி, கிளீனரும் நேற்று அதிகாலை விடுவிக்கப் பட்டனர்.

இக்கொள்ளைச்சம்பவம்பற்றி பொலிசில் புகார் செய்தால் 'கொலை செய்வோம்' என அந்தக் காடையர் கோஷ்டி பயமுறுத்திவிட்டு தலைமறைவாகி விட்டதாம். [மா]

## ரூ 10 லட்சம் பெறுமதியான
# போதைப் பொருள்
## கடத்தல் முறியடிப்பு

கொழும்பு, ஞாயிறு

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள் கடத்தலொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கடத்தலில் ஈடுபட்ட இருவர் கடந்த வாரத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 180 கிறாம் ஹீரோய்னும் பல போலிக் கடவுச் சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. [ரா

## மன்னாரில் 50 பேர் கைதாகி விடுதலை

வவனியா, திங்கள்

மன்னார் தள்ளாடி முகாமிலிருந்து நகருக்கு வந்த இராணுவத்தினர் சந்தையில் நின்ற 50 பேரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட 50 பேரும் ஒரு மணிவரை தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்த பின்னர் நண்பகல் 1 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்,

இது இவ்வாறிருக்க மன்னார் கோட்டை கூட்டுமுகாமிலிருந்து நேற்று அதிகாலை இராணுவத்தினர் வெளிவந்து விடியும் வரை வெளியே படுத்திருந்தனர்.

இராணுவத்தினர் படுத்திருப்பதை 'சென்றிக்கு' நின்ற போராளிகள் அறிந்து 'கிறனேட்'டுகளை வீசினார்கள். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் கோட்டைக்குத் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [மா]

## 5 பேர் கொண்ட
# மத்தியதர குடும்ப செலவு மாதம் ரூபா 3,900!

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் ஐந்துபேரைக் கொண்ட மத்தியதரக் குடும்பமொன்று திருபதிகரமான மான முறையில வாழ்வதற்கு மாதமொன்றுக்கு 3,900 ரூபா தேவைப்படுகிறது

"அரச உத்தியோகத்தர்களின் சுயாதீன தொழிற்சங்கங்களின் மாநாட்டி"னால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவொன்றே இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்நிபுணர் குழுவின் தகவலின்படி 5 பேரைக்கொண்ட மத்தியதரக் குடும்பமொன்று கொழும்பில் திருப்திகரமான வாழ்க்கை வாழ 4,705 ரூபாவும், நாட்டின் ஏனைய பகுதிகளில் 3 900ரூபாவும் தேவைப் படுகிறது.

இக் கணக்கெடுப்பில் குடும்பத்திற்குத் தேவைப்படும் சகல பொருட்களும் எடுத்துக்கொள்ளப்பட்டனவென்றும் ஒரு குடும்பம் அதிகளவில் வீட்டு வாடகைக்கென மாதமொன்றுக்கு 750 ரூபாவைச் செலவழிக்கிறது எனவும் தெரிய வருகிறது. [ஊ]

## தமிழ்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எப்படியிருந்த போதிலும் தமிழ்ப் போராளிகள் குழுக்களின் பங்களிப்பும் இப்பேச்சுக்களில் அவசியம் தேவை என்பதை அரசிடம் வலியுறுத்தி வருகின்றோம்.

எமது பேச்சுக்கள் மூலம் எட்டப்படும் உடன்பாடுகள் இலங்கை அரசு தமிழ்ப் போராளிகள் குழுக்களுடன் நடத்தும் பேச்சுக்கள் மூலமே முழுமையடைய முடியுமென்று நம்புகிறோம்.

எனவே இந்திய அரசிடம் இலங்கை அரசு தமிழ் போராளிக்குழுக்களுடன் சந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம்" என்றார்.

### வரும் அவசியம் இல்லை

யாழ்ப்பாணத்துக்கு வரும் உத்தேசமெதுவும் உண்டா? என்று கேட்டபோது, தற்போது அங்கு வரும் அவசியமெதுவுமில்லை. கொழும்பிலிருந்து வடக்கு கிழக்குப்பகுதி நிலைமைகளை அறிய முடிகின்றது. அத்துடன் வடக்கு கிழக்கிலிருந்து தினமும் பலர் தம்முடன் தொடர்பு கொண்டவண்ணமுள்ளனர்" என்று திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

## அடுத்த பேச்சுக்கள் வியாழன் ஆரம்பம்

கொழும்பு, ஞாயிறு

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசுக்குமிடையே பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

நேற்றுக்காலை 10 மணிமுதல் பகல் 12 மணிவரையும், பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரையும் நேற்றைய பேச்சுக்கள் நீடித்தன.

அடுத்த கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறும். அரச தரப்பினர் கண்டி பெரஹர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள விருப்பதாலேயே இந்த இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

## தெற்கில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கிய தொடர்புகளை வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்குழுக்களின் தலைவர்கள் வடபகுதி தமிழ்த் தீவிரவாதத் தலைவர்கள் சிலரைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தெற்கில் உருவாகியுள்ள கிளர்ச்சிக்குழு பல கொள்ளை முயற்சிகளிலும் ஈடுபட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மன்னிப்பு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது, எங்கிருந்து வருகிறோம் என்பதை தெரிவிக்க வேண்டாமென்று அக்கப்பல் கப்டனால் தாம் பணிக்கப்பட்டதாகவும் அந்த அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்தில் ஈடுபட்டவர் என்று கூறப்படும் மேற்கு ஜேர்மன் சரக்குக்கப்பலின் கப்டன் இதனை மறுத்துள்ளதாக தெரிவிககப்பட்டது.

ஜூலை மாதம் 27-ம் திகதி தாங்கள் ஜேர்மனியிலிருந்து புறப்பட்டதாகவும் கடலில் இரு நாட்களே உயிர்காப்புப் படகுகளில் தத்தளித்ததாகவும் இந்த அகதிகள் கூறியுள்ளனர். [ரா-ஊ]


31-ம் நாள் நினைவஞ்சலி



த. கேதாரம்

தோற்றம்: 7 - 7 - 1954
மறைவு: 18 - 7 - 1986

அன்டிலோர் ஆழ்கடலாய், பாசத்தின் பார் போற்றும் இமயமதாய், தனக்கென்று வாழாது உறவுக்காய் வாழ்ந்திருந்தாய் -இன்று ஆறாத் துயரமதில் ஆழ்த்திவிட்டெம்மையெல்லாம் நீ மீளாத்துயில் கொண்டு விட்டாலும் நெஞ்சதனில் வேராய் பதிந்து விட்ட உன் நினைவு என்றென்றும் மாறாதிருக்குமய்யா.

நின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்.

நண்பர்கள்.

முனைத்தீவு,
பெரிய போரைதீவு
(EP)

[C 4132]



சட்டத்தரணிகளற்ற

பிரசித்த நொத்தாரிசுகளுக்கு

அண்மையில் காணி உறுதி எழுதுவது சம்பந்தமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் (20 - 8 - 86) புதன்கிழமை யன்று யாழ்ப்பாணம் ஞானம் ஹோட்டலில் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

தவறாது சமுகம் தரவும்.

இங்ஙனம்,
நேசன்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
(C - 4136)



பிரயாண ஒழுங்குகள்

★ ஜேர்மன் ★ பிரான்ஸ்
★ டென்மார்க்

ஜேர்மன் செல்பவர்களுக்கு
(COLOMBO — FRANKFURT)
நேரடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

சவூதி, ஈராக், குவைத் (CLEANERS)
இரண்டு வாரங்களில் பிரயாணம்.

மற்றும் பாஸ்போர்ட். பொன்ட். ரிக்கற்.

Hotel Gnanams,
ROOM 54.
CLOCK TOWER ROAD,
JAFFNA. (C-4137)



பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

எமது பயணங்கள் வெற்றிகரமான முறையில் நடைபெறுகின்றன.

★ கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி உடன் அழைத்துச் செல்வார்.

★ ஜேர்மன் நாட்டிற்கு செல்ல விரும்புவோருக்கு பயண ஒழுங்குகள் மிக விரைவில் செய்து தரப் படும்.

★ சவூதி அரேபியாவுக்கு வீதித் திருத்தம், விவசாய தொழிலாளர், மேசன், தச்சு வேலைகட்கு செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போர்ட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தொடர்பு:-

N. BALA

பஸ் வழி இலக்கம், 764 பலாலி வீதி, கோண்டாவில்.
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C-4129)



லிடோ

காலை 10-30, 2-30,
4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON
SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna



கடைசி வாரம்

வெலிங்டன்

வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

## தர்மகர்த்தாசபை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ ராஜ ராசேஸ்வரிஆலயதர்மகர்த்தா சபை வருடாந்தப் பொதுக் கூட்டம் சபைத்தலைவர் திரு. சி. அப்புத்துரை தலைமையில் ஆலய மண்டபத்தில் நடை பெற்றபோது புதியதர்மகர்த் தாச் சபையில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு சி. அப்புத்துரை, உபதலைவர் திரு சி.மு இராச ரத்தினம், செயலாளர் இ. தயாபரன், பொருளாளர் திரு. சு. சுந்தரம்பிள்ளை, நிர்வாக உறுப்பினர்களாக இரு

# பொறியியலாளர் பரீட்சை 14 தமிழர் சித்தி!

யாழ்ப்பாணம், திங்கள்

பேராதனை வளாகத்திலிருந்து இவ்வாண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பதினெட்டு சிவில் பொறியியலாளர்களுள் பதினான்குபேர் தமிழர்கள், நான்குபேர் சிங்களவர் ஆவர்.

சித்தியடைந்தோர் விபரம்: பொறியியலாளர் [சிவில் என்ஜினியரிங்] சேர்வில் கரவெட்டியைச் சேர்ந்த குமாரசாமி ஜெயதரன் முதலாவது இடத்தையும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தில்லைக் கனகசபை ஸ்ரீதர் இரண்டாவது இடத்தையும் பெற்றனர்.

மற்றைய பன்னிருவர், ப. ரவீந்திரன் - வல்வெட்டித்துறை, சு. ஜெயந்திரா - வல்வெட்டித்துறை, செல்வி ப கீதாஞ்சலி - ஆனைக்கோட்டை, ச. சசிதரன் - நெல்லியடி, தே மோசிகீரன் - பருத்தித்துறை, செல்வி நகுலேஸ்வரி பருத்தித்துறை, எம் உதயகுமார் - சாவகச்சேரி, சி. ஸ்ரீதரன் - இணுவில், பி இம்மானுவேல் - கொழும்பு, வி. சிவகுமார் - திருநெல்வேலி, ஹமீட் - அநுராதபுரம், எஸ். விக்னேஸ்வரன் - யாழ்ப்பாணம்

மற்றும் நான்கு சிங்கள மாணவர்கள் விபரம்: ஹேரத், செல்வி ஷோபா குணரத்னே, விக்கிரமநாயக்கே, செல்வி தீப்தி

மின்துறைபொறியியலாளர்: இளங்கோ - காங்கேசன்துறை, கொறேயா - கொழும்பு.

மெக்கானிக்கல் என்ஜினியரிங்: லோஹிதர் - கொழும்பு

புரொடக்ஷன் என்ஜினியரிங்: கில்மி - திருகோணமலை [முஸ்லிம்]. [வல்-நிரு]

பெண்களும், மூன்று ஆண்களும் தெரிவுசெய்யப்பட்டனர். [இ]


# Institute of Data Processing

(with the Collaboration of Computer Ling [Colombo)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க Computer Programming in Basic and Cobol பயிற்சிநெறியை உலகப் புகழ்பெற்ற B B C Sharp-MZ 80K Zim Clair Computer களில் யாழ்நகரின் வேறு எங்குமில்லாதவாறு அதிதரத்துடன் 120 மணிநேரத்தில் முழுதாக வழங்கமுன்வந்துள்ளனர்.

ஆரம்பம்: 20 08-1986
தகுதி: G C E. (O/L)

அலுவலர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்றமுறையில் பிரிவுகள் நடாத்தப்படும். விரைவில் இயங்க இருக்கும் எமது உயர்ரக Systime S-500 Computer கொண்ட Software House இல் திறமையானோருக்கு வேலைவாய்ப்பு உண்டு

பதிவு செய்யவேண்டிய நிறுவனங்கள்:

BOND INSTITUTION
274/ 2, Hospital Road,
Jaffna.

SCIENCE CENTER
Nelliyadi. [1-9-86]

Mr T. CHANDRAKUMAR
Opposite of D M O. Quaters
Tellippallai

HEAD OFFICE:
INSTITUTE OF
DATA PROCESSING
342, K K S Rd
(Next to Sri Lanka Book Depot)
Jaffna.

[C4095]



உங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவும், செலவினங்களைச் சுருக்கி உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ளவும்.

திட்டமிட்டு செயல்படுவது அவசியம்.

* திட்ட ஆலோசனைகள்
* நிபுணத்துவ சேவைகள்
* நிதி வசதிகள்

★ அபிவிருத்தி நிதியம் ★

* சேமிப்பு
(உயர்ந்த பாதுகாப்புடன், மகிழ்ச்சிகரமான வட்டியுடன் எதிர்கால வளம்பெறும் ஆலோசனைகள்)
* அபிவிருத்திக் கடன்
(நியாயமான வட்டியுடன் இலகு தவணையில்)
* சீட்டு
(மக்களின் இடர்பாடுகளை நீக்கிய புது வடிவங்களில்)
* காசோலை மாற்றல்
(உள்நாட்டு காசோலை மாற்றல் தொழிற்பாட்டிலுள்ள சகல இடர்பாடுகளும் தீரக்கூடியதாக)

பணத்திற்கு உன்னதமான பாதுகாப்புடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகள்......
இன்ன பிற......

தொடர்புகொள்க:-

‘அபிவிருத்தி நிதியம்’

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டி)

எம்மவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கான இடர்தீர

அபிவிருத்தி நிதியம்

இன்றுமுதல் தனது சேவையைத் தொடங்குகிறது.

[A-1062]


## நாளை மட்டக்களப்பிற்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம், திங்கள்.

மட்டக்களப்பிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து நாளை காலை விசேட பஸ்சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை காலை 4-30மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து மட்டக்களப்பிற்குப் பஸ் புறப்படும்.

புதன்கிழமை மட்டக்களப்பில்தங்கி மீண்டும் மட்டக்களப்பிலிருந்து வியாழக்கிழமை காலை 6மணிக்கு புறப்பட்டு இந்தபஸ் யாழ்ப்பாணம் வந்தடையும்.

மட்டக்களப்பு செல்லும் பிரயாணிகள் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு யாழ் பஸ் நிலயத்தில் ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவாரத்தில் இரண்டு அல்லது மூன்று சேவைகள் மட்டக்களப்பிற்கு நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ)

## தொழிலாளர்களுக்கு சங்கம் அவசியம்

யாழ்ப்பாணம் திங்கள்

‘யாழ் மாவட்டத்தில் திறமையான தொழிலாளர்கள் இருந்தும் தொழிலாளர்களுக்கென இதுபோன்ற சங்கங்கள் இல்லாத காரணத்தால் எமது சமூகத்தில் பல நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதனால் நம் பொருளாதாரம் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.’

இவ்வாறு நீர்வேலி கட்டட மரத் தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ் மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர் திரு கடஞ்சலிங்கம் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு சி நடராசா, செயலாளர்: திரு வ. க. துரைசிங்கம், பொருளாளர் திரு சி சின்னத்தம்பி,

4 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. இந்த அங்குரார்ப்பணக் கூட்டம் நீர்வேலி மத்திய இளைஞர் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. [க-இ]

## வல்வையில் படையினர் ஒருவர் பலி போராளி படுகாயம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வையில் படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் படையினர் ஒருவர் பலியானரென்றும் போராளிகளில் ஒருவர் படுகாயமடைந்தாரென்றும் புலிகளின் குரல் செய்திப்பலகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திப்பலகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் நேற்றைய தினம் காலையில் முகாமுக்கு முன்பாகவுள்ள மாடி வீடு ஒன்றின்மேல் ஓட்டைப் பிரித்து மறைந்து நின்று முகாம் பாதுகாப்புக் கண்காணிப்பில் இருந்த போராளி ஒருவரைக் குறிபார்த்துச் சுட்டதில் போராளிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் செயலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த இரவு சென்றி அரணில் நின்ற படையினர் ஒருவரை சினைப்பர் மூலம் குறிபார்த்துச் சுட்டதில் அவர் அரணிலிருந்து வீழ்ந்து பலியானார். [இ]


### கச்சேரி - யாழ்ப்பாணம்

# கட்டிடத்திருத்த வேலைகளுக்கான கேள்விகள்

1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி காலை 10-00 மணி வரை கீழே குறிப்பிடப்பட்ட திருத்த வேலைகளுக்கான கேள்விகள் ரூபா 50 000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் அரசாங்க வேலைகள் ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினல் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினல் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரராகவோ இருத்தல் வேண்டும்

இவ்வேலைகளைச் செய்ய விரும்புவோர் 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் அவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வேலைக்கும், திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 100/- உம், திரும்பப்பெறமுடியாத வைப்புப்பணமாக ரூபா 25/- உம், என்னால் பெயர் குறிப்பிடப்படும் வங்கியில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை இலக்கம் | வேலைகளின் விபரம் |
| --- | --- |
| [1] | யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகக் கட்டிடத்துக்கு வெள்ளை/எமல்சன் பெயின்ற் அடித்தல். |
| [2] | யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக வளவு மதில் சுவர்களுக்கு சிறு திருத்த வேலைகளும் காவி அடித்தலும. |
| [3] | சமூகசேவை, சிறுகைத்தொழில் திணைக்கள கட்டிடங்களுக்குத் திருத்தவேலைகளும், பெயின்ற் அடித்தலும். |
| [4] | யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக வளவுக்குள் அமைந்திருக்கும் வாகன ‘கராஜ்’ திருத்த வேலைகளும். |
| [5] | யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலக கட்டிடத்தின் யன்னல்களுக்கு கம்பிவலைகள் பொருத்துதல். |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, பின் கடித உறையிலிடப்பட்டு மெழுகுசீல் வைக்கப்படுவதுடன் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ‘‘யாழ்ப்பாணம் கச்சேரி கட்டிடத்திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் வேலை இலக்கம்...... (வேலை இலக்கத்தைக்குறிப்பிடுக) என்று குறிப்பிடப்பட்டு மேற்கூறிய திகதிக்குமுன் இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும் அல்லது யாழ்ப்பாணம் கச்சேரி நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் அவருடைய கேள்வி என்னால்ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற எனது அறிவித்தல் கிடைத்த ஒருவாரகாலத்துக்குள் குறிப்பிட்ட வைப்புப் பணத்தைச்செலுத்துவதுடன, வேலைக்கான ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவேண்டும். அவ்வாறு செய்யத தவறின் அவரதுகேள்வி இரத்துச்செய்யப்படலாம். தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையின் 5% (வீதத்தை ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாகச் செய்துமுடிப்பதற்கான பிணைப்பணமாக என்னால் பெயர்குறிப்பிடப்படும் வங்கியில் செலுத்தவேண்டும் வேலை திருப்திகரமாகச் செய்துமுடிக்கப்பட்டபின் இந்தவைப்புப் பணம் என்னால்திருப்பிக்கொடுக்கப்படும்.

கேள்விவிண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், அவற்றின் பகுதி எதையாவது நிராகரித்தல் அல்லது அவற்றை முற்றாக நிராகரித்தல் என்னும் உரிமைகளும், அனைத்து தீர்மானங்களையும், இறுதிமுடிவுகளையும் எடுக்கும் அதிகாரமும் கேள்விச் சபைத்தலைவரையே சார்ந்ததாகும்.

வை மு பஞ்சலிங்கம்
மாவட்டசெயலாளரும்
அரசாங்க அதிபரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
14-8-1986

(A1146)

# பாகிஸ்தானில் மீண்டும் கலவரம்

# ஒரு பொலிஸ் உட்பட 5பேர் பலி!

கராச்சி. ஆகஸ்ட. 17

கராச்சியில் பெனுஸிர் பூட்டோவின் ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே நடைபெற்ற மோதல்களில் ஒருபொலிஸ்காரர் உட்பட ஐந்துபேர் இறந்துள்ளதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

உலகச் செய்திகள்

இம் மோதல்களின் போது பெனுஸிர் பூட்டோவின் ஆதரவாளர்கள் எனக்கூறப்படுவோர் பொலிசாரை நோக்கி கற்களால் வீசித்தாக்கிய பொழுது பொலிசார்ட தில் நடவடிக்கையாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் இதனுல் ஐந்துபேர் இறந்துள்ளதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

இம்மோதல்களைக் கட்டுப்படுத்த வன்முறை தலை தூக்கியுள்ள பகுதிகளுக்கு இராணுவப்படைகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது

இச்சம்பவங்களின்போது இப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றைச் சுற்றிவளைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்தைத் தாக்கி பெரும் சேதமாக்கியதுடன் அங்கு காவலில் வைக்கப்பட்டிருந்த பல கைதிகளை விடுவித்துள்ளனர்.

இதேவேளை பாகிஸ்தானின் பல பகுதிகளில் எதிர்க்கட்சித் தலைவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கைதுசெய்யப் பட்டதையடுத்து அங்கு மூன்ருவது நாளாக வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க பாகிஸ்தான் அணுகுண்டைப்பெறும் நிலையிலிருப்பதாகக் கிடைக்கும் தகவல்கள் உலக மக்கள் அனைவருக்கும் முக்கியமாக ஆசிய நாடுகளுக்கு பெரிதும் கவலையளிப்பதாய் சோவியத் துணை அதிபர் திரு. எஸ். வி. தப்லி குறைகூறியுள்ளார்.

இந்து மாகடல் பகுதியில் அமைதியை ஏற்படுத்த பாரதமும் இதரயண்டலசார்பற்ற நாடுகளும் விரும்பும் அதேவேளையில் பாகிஸ்தான் வேறு ஒரு திசையில் செல்ல முடிவு செய்திருப்பதாக அவர்மேலும் தெரிவித்தார்.

## படகுவிபத்து 39 பேர் பலி

புதுடில்லி, ஆகஸ்ட் 17

ஆந்திர மாநிலத்தில் வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து 39 கிராமவாசிகளை ஏற்றிச் சென்ற மீட்புப்படகு 'இந்துறு நகரம் என்னும் பகுதியில் நீரில் கவிழ்ந்ததால் அனைவரும் இறந்துவிட்டதாக தெரியவருகிறது. (இ)

## புதுடில்லியில் ஈழ இயக்கம் அமைப்புத் தலைவர்கள்

சென்னை, ஆகஸ்ட். 17

இந்திய (மத்திய)வெளியுறவு அமைச்சக அதிகாரிகளின அழைப்பின் பேரில் சென்னையிலுள்ள ஈழவிடுதலை இயக்கங்கள் நேற்று புதுடில்லி சென்றன.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி ஆர். எல் எவ்.), தமிழீழவிடுதலைப் புலிகள் (எல்.ரி ரி ஈ.), ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஆகிய இயக்கங்களின் பிரதிநிதுகள் புதுடில்லியில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து இலங்கை அரசு சமீபத்தில் தெரிவித்துள்ள யோசனைகள் குறித்தும் சமீப இலங்கைச் சம்பவங்கள் குறித்தும் இந்திய அரசு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

## ஈழவர் முன்னணி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், திங்கள்

'ஈழப்போராட்டத்தில் ஈழவர் பங்களிப்பும் வெகுஜன அமைப்புக்களின் செயற்பாடும்' என்ற தலைப்பில் நாளை செவ்வாய்க்கிழமை காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் ஈழவர் முன்னணியின் ஆதரவில் கருத்தரங்கு ஒன்றுநடைபெறவுள்ளது.

அமெரிக்கா———

# அணுஆயுத சோதனையை நிறுத்த ராஜீவ்வேண்டுகோள்

புதுடில்லி, ஆகஸ்ட். 17

அணுஆயுத உற்பத்தியை சட்டவிரோதமாக்க கட்டாய சர்வதேசஉடன்பாடொன்றை அமெரிக்கா ஏறுக்கொள்ள வேண்டுமென்று இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கூறியுள்ளார்.

பல்கேரிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே திரு ராஜீவ்காந்தி இவ்வாறு கூறினர்.

மெக்ஸிக்காவில் நடைபெற்ற ஆறுநாடுகள்கொண்ட உச்சிமகாநாட்டிற்கு செவிமடுத்து சோவியத்யூனியன் அணுஆயுத சோதனையை நிறுததுவதாக அறிவித்துள்ளது என்றும் இதேபோன்று அமெரிக்காவும் செயற்படும் என்று தான் நம்புவதாகவும் திரு ராஜீவ்காந்தி மேலும் தெரிவித்தார்.


# கல்வியாண்டு 87/88

போதனை பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் வெளிவாரி பட்டப் படிப்பினை மேற்கொள்ள விரும்புவோர் கவனத்திற்கு.

1. G. C. E. A/Lல் 3 பாடம் சித்தியடைந்தவர்களும் பட்டதாரியாகலாம்.
2. இதற்கான பதிவுகள், அனுமதிகள் யாவும் எமது நிறுவனத்திஞலேயே செய்து கொடுக்கப்படும்.
3. கலைமாணி (G. A. Q.), வர்த்தகமாணி (1st Com.) ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
4. B. A மீட்டல் வகுப்புக்களும் 23-08-86 ஆரம்பமாகின்றன.

முக்கிய குறிப்பு: (B .A. வகுப்புக்கள் கூடிய மணித்தியாலங்கள் எடுத்து 3 மாதத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக்கொடுக்கப்படும்.)

ஆசிரியர்கள்:

| G. A. Q. — B. A. | 1st COM. — B.COM. |
|---|---|
| பொருளியல்-குமாரவேல் | பொருளியல் - குமாரவேல் |
| தமிழ் - குழந்தை | வர்த்தகம் - தேவா |
| புவியியல் - குணராஜா | கணக்கியல் - மரியதாஸ் யோகராஜா |
| மெய்யியல் - வேல் சிவானந்தன் | ஆங்கிலம் - இமானுவேல் பெர்னுன்டோ |
| அரசியல் - குமார் | கணிதம் - தயாபரன் |
| இந்துநாகரீகம் - அருள்நங்கை | |

வகுப்புக்கள்பற்றிய விபரங்களுக்கு:

The Jaffna Education Centre,
பட்டப்படிப்புக்கள் பகுதி,
22, ராமையா செட்டியார் லேன் (சாந்தி சினிமா முன்பாக), யாழ்ப்பாணம்.
(A 1051)


## இரதமேறிக் காத்திடுவாய்

சங்கத்தமிழ வ்வைக்கருளிய கணபதியே
சங்கரன் மைந்தனே சிவஞானப்பிள்ளையாரே
இறைஞ்சித் தொழுவார்க்கு அருளும் விநாயகனே
இருளைகடிந்து உள்ளொளி பெருக்கிடுவாயெமக்கே.

அன்புள்ளுருகி ஆர்ப்பரிக்கும் அடியார்க்கருள்பவனே
அரோகரா என்று அஞ்சலிப்பார் பெரும்பொருளே
சங்குவேலிப் பதியறை ஸ்ரீசிவஞானப்பிள்ளையாரே
எழில்பொங்கும் இரதமதில் ஏறிக்காத்திடுவாய்

கௌரி—கணேஷநாதன்

இன்று சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் இரதோற்சவம்.

★ ★ ★ ★

## விநாயகனை போற்றிடுவோம்

போற்றி போற்றி விக்னேஸ்வரா
போற்றி போற்றி ஐங்கரனே
மூவுலகும் உயர்வுறக்காக்கும் கணநாதனே
சைவநெறி மேலோங்கும் ஆனைக்கோட்டைப்
பதியமர்ந்த விநாயகனே போற்றி
இரதமேறிவந்து தமிழர்தம் துயர்துடைக்க
அருள்வாய் ஐயா அடியார்க்கெல்லாம்
பெருவாழ்வளிக்கும் கணபதியே போற்றி

சூரியகலா கைலாசபிள்ளை

இன்று ஆனைக்கோட்டையூர் ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் இரதோற்சவம்.

★ ★ ★ ★

## தேரேறிக் காட்சிதருவாய்

அலைகடலின் ஓரத்திலே
அமைந்த நயினையிலே
கலைவடிவாய் விளங்கும்
கருணையுளம் கொண்டவளே
நிலையிலா உலகினிலே
நிலவுகின்ற கொடுமைகளை
சிலைவடிவாய் நின்றே
தீர்த்துவைப்பாய் அம்மா!

இலைஎன வருமடியார்
இடர்களைத் தீர்ப்பவளே
மலைமகளே உன்னை
வணங்குகின்ருேம் தினமும்
தலைவியாய் நின்றுகொண்டே
தமிழரை காக்கவென்றே
கலைமலிந்த தேரேறி
காட்சிகொடுப்பாய் அம்மா!

நயினை இராகுலம்

இன்று நயினை நாகபூஷணி அம்பாள் இரதோற்சவம்.

★ ★ ★ ★

## கார் விநாயகா!

தொண்டைநாட்டில் விக்கிரக மாக்கிக்கும் பிட்டஆசைத்
தொண்டர்க டல்கடந்து ஈழமேறி- உன்னையே
கொண்டுவந்து கோவில்கட் டித்தம் மரியாலையில்
தொண்டு செய்கின் ருர்விநாய கா!

பண்டையர்க்கு பண்டையரு ளிப்பன்செய் தீர்நல்ல
பண்பருளி மோட்சமரு ளிக்காத்துத்- தேரினில்
பண்ணவனுய் வீற்றிருந்து எம்மிடர்களைக்கழுவிப்
பண்டிதனுய் கார்விநாய கா!

சுண்டுக்குளிக் கவிஞர் கா. யோகராசா

இன்று அரியாலை சித்திவிநாயகர் தேர்.

## இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள் கோண்டாவில் மேற்கு சந்தர்வளவு ஸ்ரீ மகாசணபதிப் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் இன்று காலை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். நாளை மறுதினம் கோயில் பொங்கலும் வியாழக்கிழமை பூங்காவன உற்சவமும் நடைபெறும். [வா]

## மறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள் மறவன்புலவு புனர்வாழ் வாழ்வுத்திட்ட அகதிகள் நல்வாழ்வச் சங்கத் தலைவர் திரு சு. செல்வராசா தான் ராஜினமா செய்துள்ளதாக இம் மாதம் 16ம் திகதி ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறு என்றும் தான் தொடர்ந்து தலைவராக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார். [இ]


ENGLISH CLASSES

ஆங்கில வகுப்புக்கள்

பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் கிழமை நாட்களில் ஆரம்பமாக உள்ளது.

வெளிநாடு செல்பவர்கட்கும் பாடசாலை மாணவர்க்கும் உகந்ததாக

காலை மாலை வகுப்புக்கள்

உடன் தொடர்பு கொள்க.

North Ceylon Technical Institute

14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24355

கிளை: சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

A 1061



பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். (A-1029)



இதோ!

அமைதியான, பாதுகாப்பான சூழலில்!!

நாளை மங்களகரமான

★ திறப்புவிழா ★

EBANEE

Communication & Travels

A R. Building, (1st Floor)
No 10, Kachcheri Nallur Road,
Chundikuli, JAFFNA.
T.Phone: 24844 — 24845

எதிர்வரும் 19- 8- 86 செவ்வாய்க்கிழமை [பௌர்ணமி தினத்தன்று] காலை 7.30 மணிமுதல் 8.40 மணிவரை வரும் சுப முகூர்த்த வேளையில், சுண்டிக்குளி- கச்சேரி மினிபஸ்நிலைய முன்பாகவுள்ள ஏ. ஆர். கட்டிடத்தில்[மேல்மாடி]

"எ ப னி"

கொம்யூனிக்கேசன் அன் ரவல்ஸ்

என்னும் ரெலிபோன்- ரெலெக்ஸ்சேவைகள் ஸ்தாபனத்தை உயர்திரு. மு.கணேசசுந்தரம் அவர்கள் (மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர்) ஆரம்பித்துவைப்பார்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஏ.ஆர். கட்டிடம்மேல்மாடி
10, கசசேரி நல்லூர்வீதி,
[கச்சேரி மினிபஸ்நிலையமுன்பாக]
சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.
(C4107)

இவ்வண்ணம்
தங்கள் நல்வரவை
நாடும்
கு. நடராசா,
ஆ. சூரியகுமார் [பாபு]


கிளிநொச்சியில்

# அரச நிர்வாகத்தில் அவசியமற்ற தலையீடு

## —அத்தியாவசியசேவைகள் குழு

யாழ்ப்பாணம், திங்கள் "கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைப் பயன்படுத்தி இராணுவத்தினர் அரச நிர்வாகத்தில் அவசியமற்ற தலையீடுகளை நடத்திப் பொதுமக்களையும் அரச நிர்வாகங்களையும் தொல்லைக்குட்படுத்துகிறார்கள்."

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசியசேவைகள் குழுச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கிளிநொச்சியில் இராணுவக் கெடுபிடியால் இடம்பெயர்ந்தோருக்கு இருவார உலர் உணவு விநியோகம் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்தபோதும் இராணுவ இணைப்பதிகாரி இதனை இராணுவ முகாமில் வைத்துவழங்க வேண்டும் என்று வற்புறுத்தியதால் இன்றுவரையும் உணவுப் பொருட்கள் வழங்கப்படாமல் தாமதம் ஏற்பட்டுள்ளது

"இணைப்பதிகாரியைச் சந்திக்கச் சென்ற கிராம சேவையாளர்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டதால் இணைப்பதிகாரியைச் சந்திக்க முடியாதகிராம சேவையாளர்களுள் குறிப்பாக கிளிநொச்சிப் பகுதி கிராம சேவையாளர் ஒருவர் இணைப்பதிகாரியின் பணிப்பின் பேரில் தற்காலிக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் இதனால் உணவு முத்திரை விநியோகம் அப்பகுதிகளில் தடைப்பட்டுள்ளது

"விவசாயிகளின் தேவைக்காக குளத்திலுள்ள நீரை நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்கள் திறந்துவிட்டபோது அதனை இராணுவத்தினர் தடுத்து நீர்விநியோகப் பகுதியைப் பூட்டிவிடுகின்றார்கள். இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்."

[சி-எ]

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 2 [1986-8-18]
கிழமை: திங்கள்
திதி: சதுர்த்தசி பி இ. வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு ப.வரை

மேடம்: எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கலாம். சகோதர வழிச் சுகக்குறைவும் உண்டு.

இடபம்: அன்னை வழி ஆதரவு கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் உண்டு பொருள் வரவுக்கும் இடமுண்டு

மிதுனம்: அற வழியில் மனம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலமும் பணம் செலவாகும். பிள்ளைகளாலும் மகிழ்ச்சியுண்டு.

கடகம்: பகை மூட்டம் வட்டமிடும் வீணான வார்த்தைகளால் மனம் புண்படும் தொழில் துறையிலும் முட்டுக்கட்டை ஏற்படும்.

சிங்கம்: நலன் தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு பெரியோர்களின ஆதரவும் உண்டு

கன்னி: உறவு முறைகளில் பிளவுகள் தென்படும். மனதில் உற்சாகம் குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

துலாம்: கை கொடுத்து உதவுவதற்குத் தந்தை முன் வருவார் காரிய சித்தியும் கிடைக்கும். பெரியோர் உதவியும் உண்டு

வருச்சிகம்: தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் புதிய தொடர்புகளும் உண்டு.

தனுசு; மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும். திடீர் வரவுமுண்டு.

மகரம்: தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். உடல்நலமும் பாதிக்கப்படும்.

மீனம்: அற்ப விடயத்திற்குக் கூட ஆத்திரப்படுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மின் இணைப்புக்கள் வழங்குவதில் தீவிரம்

மாவிட்டபுரம், ஞாயிறு தெல்லிப்பழை உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோத மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் எழுந்துள்ள நிலையையடுத்து மின்சாரம் கோருபவர்களுக்கு உடனடியாக தற்காலிகமின் இணைப்புகள் வழங்கப்பட்டுவருகிறது

மேற்படி உப அலுவலக எல்லைக்குள் கடந்தபல வாரங்களாக சட்டவிரோத மின் இணைப்புகள் பெருமளவில் துண்டிக்கப்பட்டன. கடந்த 13ம் திகதியும் துர்க்காபுரம், 8ம் கட்டை, சோடாக்கம்பனி ஒழுங்கை, அன்னமார் வீதி, தெல்லிப்பழை சந்தை வீதி ஆகியவற்றில் இரவும், பகலும் சட்டவிரோத மின்இணைப்பை துண்டிப்பதில் உப அலுவலக மின்சாரப்பகுதி ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இவ்வாறு சட்டவிரோதமின் இணைப்பு துண்டிக்கப்படுவதால் மின்சாரம் கோரி உப அலுவலகத்திற்கு ஏராளமானோர் படையெடுத்து வருகின்றனர்.

அவர்களுக்கு உடனடியாக தற்காலிக மின் இணைப்புகள் வழங்க உப அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுவரை 40க்கு மேற்பட்ட தற்காலிக மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. (எ)

## இன்று ரதோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள் சண்டிலிப்பாய் மாகியம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

## மயிலணியில் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள் சுன்னாகம் மயிலணிஜனசக்தி சனசமூ நிலைய விளையாட்டுக் கழகத்தின் 20-வது ஆண்டு விழாவையொட்டி நாளை செவ்வாய்க்கிழமை மயிலணி வடக்கில் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர்போட்டி நடைபெறவுள்ளது.

இந் நிலையத்தின் தலைவர் திரு த விஜயஸ்ரீ தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் வலிதெற்குஉதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.


16-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி மாலதி சிவமூர்த்தி

தோற்றம்: 14-04-1963
மறைவு: 03- 08- 1986

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி நீங்கள் மீளாத் துயில்கொண்டு பதினறு நாட்கள் பறந்தோடி மறைந்தாலும் எங்கள் அனைவர் இதயத்திலும் நீங்காத நிழலாய் நிற்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லோரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கட்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

அன்புக் கணவன்,
ஆசை மக்கள், தாய்,
சகோதர சகோதரிகள்.
பிள்ளைகள், உற்றார்,
உறவினர். நண்பர்கள்.

678/2 A,
கே கே. எஸ். ரோட்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(C 4122)



Diploma in Pharmacy

(பாமஸி பயிற்சியில் டிப்பளோமா)

அரசாங்க வெளிவாரி பாமஸி பயிற்சியில் தேற உள்ளவர்களும்,

ஆயுள்வேத வைத்தியர்கட்கும், பாமஸி தொழிலில் ஈடுபட்டோருக்குப், வெளிநாடு செல்பவர்கட்கும் உகந்த பயிற்சிநெறி,

ஆரம்பம்: 23 Aug. 1986

விபரங்கட்கு:

North Ceylon Technical Institute

14, ST. PETERS LANE
Hospital Road,
Jaffna.

Tele: 24355 A 1060

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 18-8-86

# இனப்பிரச்னைக்கு ஜனநாயக ரீதியில் தீர்வுகாண்பதில் உறுதி பூண்டுள்ளேன் —ஜனுதிபதி

கொழும்பு, ஞாயிறு

''இலங்கையின் இனப்பிரச்னையை ஜனநாயக ரீதியில் தீர்த்துவைக்க உறுதபூண்டுள்ளேன்'' என்று ஜனுதி. தி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிவித்திகலயில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் நேற்று உரைநிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஜனுதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''அரசாங்கம் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காக முன்னர் மாவட்ட சபைகளை ஸ்தாபிக்க முனைந்தபோது அதனை ஆட்சேபித்த எதிர்க்கட்சியினர், மாவட்டசபை போதாது மாகாணசபைகளை ஸ்தாபியுங்கள் என்றனர். இன்று அரசாங்கம் மாகாணசபையை ஸ்தாபிக்க முன்வந்திருக்கையில் எதிர்க்கட்சியினர் மாவட்ட சபைகளே போதும் என்கின்றனர்.

''ஜே வி பி. தலைவர் விஜே வீரவை எமது அரசாங்கம் விடுதலைசெய்தபோது அதனை ஆட்சேபித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இன்று அக்கட்சியுடன் நட்புப் பூண்டுள்ளனர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு நிலையான கொள்கையுடன் காணப்படவில்லை''

இவ்வாறு சுதந்திரக் கட்சியினர் நிலையான கொள்கையின்றி இருப்பதற்குக் காரணம் அக்கட்சியின் தலைவி திருமதி பண்டாரநாயக்கா றேயல் கல்லூரியில் கல்வி கற்காததே எனவும் ஜனுதிபதி தமாஷாகக் கூறினுர். [ஊ]

## இன்று

யாழ்ப்பாணம் திங்கள் நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகா ஆலய ரதோற்சவம் இன்று 18ம் திகதி திங்கட்கிழமையும் நாளை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

### தீவுப்பகுதியில்

## செவனநிதி திட்டமூலம் 5,000 ரூபா வழங்கப்படும்!

வேலணை, ஞாயிறு

பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் செவனநிதியின் மூலம் அரசாங்கம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, நயினுதீவு ஆகிய பகுதிகளிலுள்ள பத்து கிராமோதய சபைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கு தலா ஐயாயிரம் ரூபாயை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்டமுகாமையாளர் திரு. த பு முருகையா மேற்கொண்டுள்ளார்.

அரசினரிடமிருந்து மாதாந்தம் உதவிப்பணம் பெறுபவர்களே இந்த செவன நிதித்திட்டத்தில் இடம்பெறவுள்ளனர்.

செவனநிதித் திட்டத்தின் மூலம் பெற்றுள்ள இந்தஐயாயிரம் ரூபாவை அவர்கள் திருப்பிச் செலுத்தத்தேவையில்லை.

கிராமோதயசபைப் பிரிவுகளில் செவனநிதித்திட்டத்தின் கீழ் இவ்வித நிதிகளைப் பெறுவோர்களை தெரிவுசெய்வதில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை உத்தியோகத்தர் திரு. செ. தெய்வேந்தி ஈடுபட்டு வருகின்றுர். (இ)

## யாழ். மாவட்ட உணவு பொருள் விலை விபரம்:

யாழ்ப்பாணம், திங்

யாழ். குடாநாட்டில் அரிசியின் விலையில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது நாட்டரிசி தரம் I கிலோ 9 ரூபா 50 சதமாகவும், தரம் II கிலோ 8 ரூபா 50 சதம்வாகவும் தற்போதுவிற்பனை செய்யப்படுகிறது.

உள்ளூரில் செய்கை பண்ணப்படும் செத்தல் மிளகாய் விலை அதிகரித்துள்ளது. கிலோ 30 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட செத்தல்மிளகாய் இப்போது 35 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இதே வேளை சீனுவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாய் கிலோ 22 ரூபாவா விற்பனை செய்யப்படுகிறது

உள்ளூரில் செய்கை பண்ணப்படும் சின்னவெங்காயம் கிலோ 6 ரூபாவிலிருந்து 12 ரூபாவரையும, கத்தரிக்காய் கிலோ 5 ரூபாவிலிருந்து 6 ரூபாவரையிலும் பயிற்றங்காய் கிலோ 8 ரூபாவிலிருந்து 10 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

மலைநாட்டிலிருந்து வரும் கோவா கிலோ 12 ரூபாவாகவும், லீக்ஸ் கிலோ 20 ரூபாவாகவும், கரட் கிலோ 22 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 20 ரூபாவிலிருந்து 22 ரூபாவரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. [வா]

## அந்தோனியார் ஆலயத்தில்கடும் சோதனை!

வவனியா, திங்கள்

வவனியா மாவட்டத்திலுள்ள ரம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயம் பொலிஸ் கமாண்டோக்களினுல் பலத்தசோதனைக்குள்ளானது.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த சோதனையின் போது தேவாலய வண.பிதா தமதுவிடுதியில் இருக்கவில்லை. இந்தநிலையில் வணபிதாவின் அனுமதியின்றி தேவாலயத்தின் மூலஸ்தானத்துக்குள் புகுந்துகூட கமாண்டோக்கள் சோதனை நடத்தினராம். [மா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.

## வல்வைக் கடல் பகுதியில் ஹெலிகப்டர் சூடு!

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வைக் கடலில் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த ட்ரோலர் வலை மடியில் கல் ஏறிவிட்டதால், படகை நிறுத்தி கல்லை அகற்றும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் வானத்தில் பறந்துவந்த ஹெலிகொப்டர், படகினைப் பலதடவைகள் சுற்றி வட்டமிட்ட பின் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டது.

தாழப் பறந்து பலதடவைகள் வள்ளத்தின் மீது சுட்டதில் அதில் இருந்த மீனவ இளைஞர் ஒருவர் கையில் பலத்த காயமடைந்தார். இதனுல் கிலி கொண்ட மீனவர்கள் வலையை வெட்டிவிட்டு படகை கரைக்குக் கொண்டுவந்தனர் தொடர்ந்தும் படகின் மீது ஹெலி தாழப்பறந்து சுட்டது இதேநேரம் வல்வை இராணுவ முகாமிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் படகை நோக்கி வந்தன படகும் சிறிது சேதமடைந்தது.

அப்போது வந்த விடுதலைப் புலி போராளிகள் ஹெலிகொப்டர் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலையடுத்து திரும்பிச் சென்ற ஹெலிகொப்டர் கரையோரமாகச் சுட்டுக்கொண்டு சென்றதில் கரையோர வீடுகள்சேதத்துக்குள்ளாயின. ட்ரோலர் கரைக்கு வந்ததும் காயமடைந்த இளைஞர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

## மருந்துகள் விநியோகம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

யாழ் சுகாதார திணைக்களத்தின் மாவட்டமருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வருட மூன்றும் காலாண்டிற்கான மருந்துவகைகளை இப்பகுதியிலுள்ள அரசினர்வைத்திய சாலைகளுக்கு கடந்தவாரம் விநியோகம் செய்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமையன்று பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், அளவெட்டி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் லொறிமூலம் நேரடியாக கொண்டுசென்று விநியோகிக்கப்பட்டன. (வா-இ)

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜபூபதி அருணுசலம்

திருமதி இராஜபூபதி அருணுசலம் சிவபதமடைந்துள்ளார். இவர், முன்னுள் மட்டுவில் கல்வத்தை சிவன்கோவில் தர்மகர்த்தா காலஞ்சென்ற துரைசிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், முன்னுள் சாவகச்சேரி நகராட்சிமன்ற நகரபிதாவும், இளைப்பாறிய மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. நமசிவாயம் அருணுசலம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி இரகுபதி நவரத்தினம் அவர்களின் அன்புத் தாயாரும், முன்னுள் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு வ. ந நவரத்தினம் அவர்களின் அன்பு மாமியாரும், கலாநிதி சிறீநமச்சிவாயா (அமெரிக்கா) சிறீவல்லிபுரானந்தன் [கனடா] மைத்திரேயி, சிறீசண்முகானந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அன்னுரின் ஈமைக்கிரியைகள் 18-08-1986 [இன்று] திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

பொலிஸ்நிலைய வீதி, சாவகச்சேரி.

உறவினர்கள்.

(C 4133]

### திருமதி சோமாவதி சோமசுந்தரம்

இவர் புங்குடுதீவு கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொழும்பு பிரபல துறைமுக ஒப்பந்தகாரருமாகிய அ. சோமசுந்தரத்தின் அருமை மனைவியும், தவராஜா, மகேஸ்வரி [ராணி] சுந்தரராஜா [ரஞ்சிற்] ஜெயராஜா, இராஜேஸ்வரி [வசந்தா] சுந்தரேஸ்வரி [சுகுணு] ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாதேவி, பத்மநாதன் கோப்வதி ஆகியோரின் மாமியாரும், துஸ்யந்தினி, சுகந்தி, கமல்ராஜ் ஆகியோரின் பேத்தியும், முருகேசு, காலஞ்சென்ற சிவசரணம், திருமதி சிவஞானம் தியாகராசா, திருமதி பார்வதி நடராசா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னுரின் ஈமைக்கிரிகைகள் 46, மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று இன்று [18-8-1986] திங்கட்கிழமை 4 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

தகவல்: அ. சோமசுந்தரம்.

[C 4131]

## மரண அறிவித்தல்

### செல்வன் க. தில்லைநாதன் (பாபு)

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த காலஞ்சென்ற கமலநாதனினதும், இராசம்மாவினதும் கனிஷ்ட புத்திரனும், நல்லநாதன், தவநாதன, விமலாதேவி, விரசாதேவி, விஜியதேவி, ரோகினி, திலகவதி, சுகந்தினி ஆகியோரின் சகோதரனுமாகிய தில்லைநாதன் ஜேர்மனியில் 03-08-86 அன்று அகாலமரணம் அடைந்தார் அன்னுரின் இறுதிச்சடங்கு 19-08-86 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெமுறு வல்லை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்றிவவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

[C 4134]

தகவல்: குடும்பத்தினர்.

### நாகநாதர் சுப்பையா

மண்டைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகநாதர் சுப்பையா முருகபக்தன் காலமாகிவிட்டார். இவர் பார்வதியின் அருமைக்கணவரும், நீலாவதி [நைஜீரியா ஆசிரியை]: தேவராணி ஆகியோரின் அருமைத்தந்தையும், நடராஜா [சவுதி] அருமை மாமனுரும், வினீத்தா, சிந்துஜா, பானுஜா, சுதாகினி முருகதீன் ஆகியோரின் அருமைப்பேரனுமாவார் அன்னுரின் ஈமக்கிரியைகள் 15-8-86 மண்டைதீவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C4130

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### சேவியர் மாகிறேட் சொர்ணம்மா

சேவியர் மாகிறேட் சொர்ணம்மா காலமாகிவிட்டார். இவர் திரு. றப்பியல் பிரான்சிஸ் சேவியரின் அன்பு மனைவியும், மரியகொறற்றி, அன்ரன் றூச், யோசப் பற்றிக் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ஜெசி இரட்டினம், சங்கைக்குரிய சிஸ்ரர் மேரி அசெம்சனின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னுரின் பூதவுடல் 18 8-86 திங்கட்கிழமை பி. ப. 4-00 மணியளவில் 15/26 மூளாய் ஒழுங்கையிலுள்ள அன்னுரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் ஆசனக் கோயில் சேமக்காலைச்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேம்.

(C 4135)